# திராவிடநாடு



## ஞானோதயம்?

ராஜ்ய வரி விதிப்பு அளவு அதிகமானதே. ஆகவே புது வரிப் பிரேரணைகளை மக்களின் பிரதிநிதிகள் எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை. பணக்காரர்கள் மீதே வரி விதிக்க வேண்டுமெனக் கோருவதும் சரியே. நியாயமானதே. ஆனால், பணக்காரர்கள்மீதும்இந்திய சர்க்கார்வரிகளை விதிக்கிறார்கள். ராஜ்ய சர்க்கார் எதையாவது செய்யப்போனால் பணக்காரர்கள் இந்திய சர்க்காரை அணுகுகிறார்கள். தங்கள் வருமானம் எங்காவது பாதிக்கப்பட்டுவிடப் போகிறதென்று அந்த சர்க்கார் பயப்பட்டு நடக்கிறார்கள்.

**ஆச்சாரியார்**

(11-7-52 *சட்டசபையில்*)

மலர் 11 | 20—7—52 | இதழ் 3.

# ★ புதுவரி ★

தி. வி.

இடம்:— ரயிலில் முதல் வகுப்பு வண்டி.
காலம்:— இரவு.
இருப்போர்:— தஞ்சை மாவட்ட பிரபல மிராசுதாரர்கள்.

மிராசுதாரர் 1:— என்ன முதலியார்வாள், மதராசுக்குத் தானே?

மிராசுதாரர் 2:— ஆமாம், நீங்க...

மி 1: நானும் மதராசுக்குத்தான். நீங்க என்ன விஷயமாய்......

மி 2:—எல்லாம் சொந்த விஷயமாகத்தான்.

மி 1:— என்னங்க அப்படி... ...

மி 2:— காங்கிரஸ் வந்தாத்தான், நமக்கு கஷ்டமில்லேன்னு, நம்ம பணம் ஆயிரமாயிரமா செலவு பண்ணினோம். பணம் மட்டுமா, நாம பட்ட கஷ்டம், அடைஞ்ச நஷ்டம் இவ்வளவு அவ்வளவுன்னு சொல்ல முடியாது.

மி. 1:- ஆமாம், நம்ம தொகுதியில் நான் பட்ட சிரமம் வேறு யாராலும் பட்டிருக்கமுடியாது. அப்படியும் தோத்துப்போச்சு!

மி. 2:- கம்யூனிஸ்ட். ஜெயிக்கிறுன்னு, இவங்க பண்ணின அக்கிரமம்தான் காரணம். இருந்தாலும் நம்மளைப்போல, பணக்காரங்க தயவினுலே, மிட்டா, மிராசுகாரங்க பக்கபலத்தாலே, ஏதோ இந்த அளவாவது வந்தாங்க.

மி. 1:- அவ்வளவு தொல்லைக்கிடையிலே தோள் கொடுத்தோமே —துளியாவது நன்றியிருக்குதா, பாருங்க.

மி. 2:- நன்றியிருந்தா, நல்லாயிருக்குமே — அது அவங்களுக்கு பழக்கமேயில்லையே.

மி. 1:- இருந்தாலும், ராஜாஜி, இப்படி நடந்துக்குவார்னு நான் நினைக்கவே இல்லே.

மி. 2:- நீங்க, மட்டும்தானு, நம்ம ஜில்லாவிலே, எந்த மிராசுதாரனும் கனவுகூட கண்டதில்லே.

மி 1:- நீங்க, மிராசுதாரர் கூடடத்திலே, பேசினதில்லே. அந்த ஒரு விஷயம், எனக்கு ரொம்ப பிடிச்சது.

மி. 2:- எதுங்க?

மி. 1:— கம்யூனிஸ்டுகள் ஜெயிக்கி, காங்கிரஸ் தோக்கப்பார்த்தது நாங்க கைகொடுத்து காப்பாத்தினோம். ஆனால், இப்போ, அதே கம்யூனிஸ்டுகள் கைகொடுக்கிற மாதிரி இல்லையாப்விட்டதுன்னு சொன்னீங்களே—அதுதான்.

மி. 1:- ஆமாம், பின்னே என்னவாம், இந்த ராஜாஜி, முதல்லே, புதுவரியே போடப்போறதில்லேன்னு, பிரமாதமாய்ப் பேசினர். பிறகு என்னடான்னு, வரிவரியாய்ப் போட்டுத்தள்ளிவிட்டார்.

மி. 2:- பஸ்காரர் வரி சரி—நியாயமானது. ஜனங்களண்டை வசூல் பண்ணி, கொண்டு கொடுத்து விடலாம்.

மி. 1:- ஆனல், பெட்ரோல்மீது வரி, புது நீர்ப்பாசன வசதிபெற்ற நிலங்கள்மீது வரி, அப்பப்பா, இப்படிப் போட்டா, என்ன செய்யாது.

மி. 2:- எல்லாம் போகட்டும். நிலவரின்னு சர்சார்ஜ்போட்டு, நம்ம உயிரை வாங்கிவிட்டாரே, இந்த ராஜாஜி.

மி. 1:- நம்ம, கண்டனத்தைப் பார்த்திருப்பாரே, ராஜாஜி

மி. 2:- நம்மளையெல்லாம் கூப்பிட்டுப்பேசப் போவதாகச் சொல்லியிருக்கிறாரே. உங்களுக்கு அழைப்பு வரல்லியோ.

மி. 1:- இல்லையே!

மி 2: ஐயோ, எனக்குந்தான். நான் ஒரு கார் வாங்கலாம்னுதான் வரேன்.

மி. 1:- நீங்க எங்க தங்குவீங்க?

மி. 2:- உட்லண்ட்ஸிலேதான்.

மி. 1:- நான் செலக்டில்...

மி. 2:- நாளைக்கு, நீங்க, ராஜாஜியை சந்தித்து, இதுபத்திப் பேசவீங்களோ

மி. 1:- ஹூம், எங்கங்கே......

மி. 2:- சரி, நமக்கு எங்கே முடியுது!

இடம்:— ஆச்சாரியார் இல்லம்.
காலம்:— பகல்.
இருப்போர்:— வேலைக்காரன் — தஞ்சை மிராசுதாரர்கள், ஆச்சாரியார்.

மி. 1:- அடேடே, என்னண்டை, சொல்லவேயில்லீங்க. இப்போ, நேரே இங்கேதான் வந்திருக்கிறீங்க.

மி. 2:- பின்னே, நீங்க உண்மையைச் சொல்லலியே. நானும் பொய் சொல்லவேண்டியதாயிற்று. அட, கனகசபை முதலியார் கூடவா?

மி. 1:- அவரோடே, கனகசபைப் பிள்ளை நடராச முதலியார்கூட.

மி 2:- அதோ, பார்த்தீங்களா, தென்பாதி திருநாவுக்கரசுமுதலியார். அவரோடே, மைத்துனர் மருதநாயகமுதலியார்

மி. 1:- எல்லோரும்தான் வந்திருக்காங்க — ஆனால் ஒருத்தரையொருத்தர் ஏமாத்திட்டு, தாங்களே வந்து ராஜாஜியைப் பார்த்து சலுகை வாங்கிக்கணும்கிற பேராசை.........

மி. 2:- எப்படியோ, போகட்டும். நம்மை நாமே ஏமாத்திக்க இது சந்தர்ப்பமில்லே. நமக்குள்ளே ஒத்துமையிருந்தாத்தான், இன்னும் கொஞ்ச நாட்களாவது, நிம்மதியாயிருக்கலாம்.

மி. 1:- அவரைச் சந்திக்கிற போதாவது நாம எல்லோரும் சேர்ந்து சந்திப்போம்.

[வேலைக்காரன் கையில் சீட்டெழுதியனுப்புகின்றனர்]

வேலைக்காரன்:- சாமி, யாரோ, பெரிய பெரிய ஆசாமிகளா, பத்துப் பதினைஞ்சுபேர் நிக்கிறாங்க. வாசலிலே. வரலாமான்னு.........

ஆச்சாரியார்:- யாருடா, அவா.

வே:- இதோ, அவங்க கொடுத்த சீட்டு.

ஆ:- (கலர்க்கண்ணாடியை மாட்டிக்கொண்டு) தஞ்சை மிராசுதாரர்கள்—அடடா, அவாளை வெளியிலே நிறுத்தலாமோ, சட்டுன்னு வரச்சொல்லுடா, போடா, மண்டு.

வே:- எனக்கெப்படிங்க, தெரியும், அவங்க அவ்வளவு பெரியவங்கன்னு.

11-ம் பக்கம் பார்க்க

சிறு கதை

# கூத்தாடி

தில்லை-வில்லாளன்

உள்ளே பேச்சுக் குரல் கேட்டதும், அவர் தலையை வெளியில் இழுத்துக்கொண்டார்.

குரல்கள் தெளிவாகக் கேட்டன. அவர் அப்படியே அசைவற்று நின்றார். அந்தக் குரலை அவர் உன்னிப்பாகக் கேட்டார்.

முதல் குரல்:— அப்பா......

அடுத்த குரல்:— அட, தடிப் பயலே!

மு. கு:— தங்களின் ஒரே மகன் கேட்கிறேன் — என்னை இப்படிச் சித்திரவதை செய்கிறீர்களே!

அ. கு:— பின்னே, நீ செய்த காரியத்திற்கு, உன்னைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுப்பார்களா?

மு. கு:— நான் செய்த குற்றம்...

அ. கு:— குற்றமா-குடி கெடுக்கும் தடித்தனமல்லவா செய்கிறாய்!

மு. கு:— என்ன அப்பா!

அ. கு:— காலிப் பயலே, எவனோ ஒரு காவாலிப்பயல் மகள் மகளைத் தான் கட்டிக் கொள்வேன் என்று என்னிடமே பேசுகிறாய் — என்ன துணிச்சல்!

மு. கு:— அவள் தந்தை ஒரு பிரபல வழக்கறிஞர்.

அ. கு:— ஆனால் அவன் சாதி?

மு. கு:— ஐயோ, அப்பா, சாதியா? நீங்கள் எத்தனையோ முறை சாதியைப்பற்றிப் பார்ப்பது அறிவிலிகள் செயல் என்றுசொல்லியிருக்கிறீர்களே!

அ. கு:— அது ஊருக்கு உனக்கல்லடா.

'காலிப் பயலே' என்று கூவியபடி, அவர், அறைக் கதவை படாரென்று திறந்துகொண்டு உள்ளே சென்றார்.

அந்த அறையிலிருந்த சிறுவர்கள் பதறிப் போனார்கள்.

"அப்பா..." அந்தச் சிறுவனின் வாய் குழறிற்று. இன்னொருவன் நழுவப் பார்த்தான்.

"டேய், என்னடா இது" என்றார் அவர்.

"பட்டுத் துண்டு, அம்மாவைக் கேட்டுத்தான் எடுத்தேன்" என்றான்.

"அடபோடா மடப்பயமவனே, துண்டைப் போட்டுவிட்டு இங்கே வாடா" என்று மிரட்டினார்.

சிறுவன், துண்டைப் போட உள்ளே போனான். இன்னொரு சிறுவன் நின்றுகொண்டிருந்தான்.

குப்புசாமி :— டேய், நீ யாரு வீடு?

சங்கரன்:— காண்ட்ராக்ட் கந்தசாமி முதலியார்......

கு:— என்ன. என்ன......

ச:— பேரன்

கு:— பேரனா, மூலைத் தெருவிலே இருக்கிறாங்களே, மரகதம்மா, அவங்க மகனா

ச:—ஆமாம், நான்தான் சங்கரன்

கு:— என்னைத் தெரியுமா?

ச:— தெரியுமே!

கு:— நான் யார்?

ச:— எங்க தாத்தா வீட்டுக் குமாஸ்தா குப்புசாமி பிள்ளை.

கு:— ஏண்டா, உங்க அம்மாவுக்கும் தாத்தாவுக்கும் பேச்சு வார்த்தையில்லாம போய்த்தான் பல வருஷங்களாய் விட்டதே—என்னை எப்படி உனக்குத் தெரியும்?

ச:— தாத்தாவுக்கும் எங்களுக்கும் சண்டை மூட்டினதே நீங்கதான்னு எங்க அம்மா சொல்லியிருக்கிறாங்களே.

கு:— அடபாவி! குழந்தையின்னு பார்த்தா, குரங்கு குட்டியாட்டமாயில்லே பேசுரே.

ச:— குரங்கு குட்டி பேசாதுங்க—கடிக்கும்

கு:— நீ என்னைக் கடிச்சுடாதே-நீங்க இப்பொ இங்கே என்ன பேசிக்கிட்டிருந்தீங்க?

ச:— பேசவில்லையே — ஆக்ட் பண்ணினோம்.

கு:— ஆக்ட் பண்ணினீங்களா? அப்போ, கூத்தாடப் போறீங்களா?

ச:— கூத்தாடல்லே நாடகமாடப் போறோம்.

கு:— அட கூத்தாடிப் பசங்களா! டேய், பட்டாபி, இங்கே வாடா, அம்மாகிட்டே சிபார்சு சொல்லப் போய்ட்டியோ—எலே, பட்டாபி!

பட்டாபி;— அப்பா.

கு:— கூத்தாடவா போறீங்க?

ப:— இல்லேப்பா, பள்ளிக் கூடத்தில், உணவு விடுதி கட்டுவதற்காக, நாங்களே நடிக்கும் நிதி நாடகம் ஒன்று நடத்தப் போகிறோம்.

கு:— எலே, உன்னைப் பள்ளிக் கூடம் எதுக்கு அனுப்பினேன். படிக்கவா, கூத்தாடவா?

ப:— ஏம்பா, கூத்துன்னு கேவலமாப்பா, தமிழே, இயல், இசை, கூத்துன்னுல மூன்று பிரிவாகும்னு தமிழ் ஐயா இன்னைக்குச் சொன்னாரப்பா.

கு:— அது சரிடா, படிப்புக்கும், நாடகத்திற்கு என்னடா சம்மந்தம்?

ப:— நாடகத்தாலே, படிக்காதவங்களுக்குக் கூட பாடம் போதிக்கலாமே!

கு:— ஆமடா, அதிகப்பிரசங்கி!

ப:— ஏப்பா, நம்ம நாட்டிலே எழுத்தறிவில்லாதவங்கதானே ஏராளம்—அவங்க, நல்ல கருத்துக்களை நாடகத்தின் மூலம் கற்றுக் கொள்ளலாம்.

கு:— போடா, காலிப்பயலே — அதுக்கு ஆட்ரவங்க ஆடட்டும் — நீ ஆட வேண்டாம்

அவர் உள்ளே சென்றார். பட்டாபி, தன் நண்பன் சங்கரனை அனுப்பிவிட்டு, அம்மாவிடம் ஓடினான்.

* * *

அடுப்பங் கரையில் அப்பாவும், அம்மாவும் பேசிக்கொண்டிருந்தார்கள். பட்டாபி, என்ன பேசுகிறார்கள் என்று கூர்ந்து கவனித்தான்.

கு:— அம்புஜம், நம்ம பட்டாபி,

கூத்தாடப்போறானும்—ஒத்திகைப் பார்க்கிறாரு, ஒத்திகை.

அம்புஜம்:— நீங்க குழந்தையிலே, இப்படி ஆடவேயில்லையோ. இராவணன், இரண்யன் வேஷமெல்லாம் போட்டு தெருக்கூத்தே ஆடியிருக்கிறேன்னு சொல்லியிருக்கிங்களே.

கு:— அடிபோடி, அறிவு கெட்டவளே, நான் எதுக்கு சொல்லவரேன்....

அ:— நல்லா சொல்ல வந்தீங்க. நீங்க வேஷம் போட்டபோது பார்க்க ஆட்களை நீங்களே கூட்டிக்கிட்டுப் போவணும். இப்போ போய்ப் பாருங்க.

* * *

வெளியிலிருந்து அவரை யாரோ கூப்பிடுங் குரல் கேட்டு, வெளியில் வந்தார். கணக்கப்பிள்ளை கனகசபாபதி நின்றுகொண்டிருந்தார்.

கு:— என்ன இப்பதானே அங்கே இருந்துவந்தேன். அதுக்குள்ளே எமகிங்கன்மாதிரி பின்னாலேயே வந்துட்டீரா உயிரை வாங்க?

கனகசபாபதி:— ஐயா.?......

கு:— ஐயா கூப்பிட்டாரா?

---

15—7—52 காலை 6-மணிக்கு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் தோழர் டி. என். ராமன் அவர்கள் தமது 45வது வயதில் காலமானார். மாலை 4-மணிக்கு சடலம் செங்கற்பட்டிலுள்ள அவர் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு 16–7–52 காலையில் செங்கற்பட்டில் சவ அடக்கம் நடைபெற்றது. தி. மு. கழகச் சார்பில் மாலை சூட்டப்பட்டது. கருப்புக் கொடிகளுடன் சவ ஊர்வலம் நடைபெற்றது. தி. மு. க தோழர் வகாப் தலைமையில் இடுகாட்டில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில தோழர் மு. கருணாநிதி கலந்து கொண்டார். தோழர்கள் சிங்கைத்'தமிழ் முரசு' ராதாகிருஷ்ணன், சண்முகவடிவேல், தென்னன், டி. எஸ். ராசகோபால், நமசிவாயம், லெட்சப்பா முதலியோர் தமது கடைசி மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர்.

---

மறைந்த தோழர் ராமனுக்கு கல்லூரியில் படிக்கும் இரு ஆண்பிள்ளைகளும், மூன்று பெண் குழந்தைகளும், தாயாரும் இருக்கிறார்கள்.

---

க:— உங்களை..........

கு:— எங்களை காரியமிருக்கிறபோது கூப்பிடுவாரு—இல்லேன்னா திரும்பிக்கூடப் பார்க்கமாட்டாரு.

க:— அவசியமாய், உடனே கையோடு கூப்பிட்டுகிட்டு வரச் சொன்னாரு.

கு:— கொடுக்கிற சம்பளத்திலே, ஒரு சல்லிக்காசு கூட்டிக்கொடுக்கிறதுன்னா கசக்கும். எத்தனை குமாஸ்தாக்கள் இருந்த இடத்திலே நான் ஒரு குமாஸ்தா இருந்துவேலை பார்க்கிறேன். இன்னமும்தான் அந்த எழுபத்தைந்தை எண்ணித் தருகிறார்.

க:— ஐயா, காத்துக்கிட்டிருப்பாங்க.......நீங்க பேசிக்கிட்டேயிருக்கிங்களே.

கு:— காத்துக்கிட்டிருக்கட்டுமே—வேறே வேலைதான் என்னவாம் அவருக்கு—என் வயிற்றெரிச்சலைக் கிளறிவிட்டீர். அது கொட்டாமல் ஆறுது. ஏனய்பா, மைலம் பாலம் காண்ட்ராக்ட் எடுத்தாரே என்னைக் கூப்பிட்டாரா, என் பொறுப்பிலேயே, அதை விடுவாருன்னு எவ்வளவு ஆசையாயிருந்தேன்.

க:— அதுக்கு காரணம் ஏதாவது இருக்கும்.

கு:— காரணமும், சூரணமும் — சரி, சரி போய்யா — அவர்கிட்டே போய் ஏதாவது உளறி வைச்சுப்படாதே. நான் போய் இப்பவே பார்க்கிறேன். நீர் நேரே உம்ம வீட்டுக்குப்போம்.

க:— சரிங்க.

* * *

தெருவிலே, ஆய்ந்து ஓய்ந்து நடந்துவந்தவர், வீட்டிற்குள் நடக்கிறபோது வேக வேகமாக நடந்தார். வியர்வையை வழித்துவிட்டுக் கொண்டார். மூச்சு விசையாக விட்டார். துண்டையெடுத்து இடுப்பிலே கட்டிக்கொண்டார். காண்ட்ராக்ட் கந்தசாமி முதலியார் ஈஸிசேரியில் சாய்ந்தபடி, சுருட்டைப் புகைத்துக்கொண்டிருந்தார்.

கு:— ஐயா, கூப்பிட்டீங்களா......

கந்தசாமி முதலியார்:— ஆமாங்...

கு:— நீங்க கூப்பிட்டீங்கன்னு, கணக்குப்பிள்ளைச்சொன்னவுடனே ஓடோடி வந்தேன.

க:— அப்படியொன்றும் அவசரமான காரியமில்லே, மெதுவாகக் கூட வந்திருக்கலாமே.

கு:— மனசு ஒண்ணு இருக்குங்களே......ஐயா கூப்பிட்டீங்கன்னு கேள்விப்பட்டுட்டு, இருப்பு கொள்ளுதுங்களா? நான் இருந்தாலும், அம்புஜம் விடுமா, விரட்டியடிக்காதா? ஐயாவைப் போய்ப் பார்த்துட்டுவந்து இலையிலே உக்காருங்கன்னு உத்திரவு போட்டிடுமே!

க:— சரி, இப்படி உட்காருங்க.

கு:— பரவாயில்லைங்க........

க:— சரி, சரி, உட்காரய்யா!

கு:— என்ன விஷயம்?

க:— இப்போ, கட்டட காண்ட்ராக்ட் எடுக்கலாம்னு பார்க்கிறேன்.

கு:- ஓ, செய்யலாங்களே!

க:- இப்போ, சாமான்கள் விற்கிற விலையிலே, லாபம் நிறைபா வருமான்னு சந்தேகம்.

கு:- சந்தேகந்தானுங்க.

க:- ஆனால், பிளாக் மார்க்கட்டிலே சாமான்கள் வாங்கி, கட்டிக் கொடுத்தால், எஸ்டிமேட்டை அதிகம் போட்டு இலாபம் சம்பாதிக்கலாம்.

கு:- கொள்ளை கொள்ளையாக சம்பதிக்கலாங்க

க:- ஓய், நான் எதைச் சொன்னாலும், ஒத்தூதினா என்ன செய்கிறது?

கு:- ஆமாங்க.

க:- சரி, சரி, பாங்கர் கண்ணுசாமிப்பிள்ளை, ஒரு வீடு கட்டறார். அதை காண்ட்ராக்ட் எடுத்திருக்கிறேன்.

கு:- செய்வோங்க.

க:— சரி, போய் இண்ணைக்குமாலையிலே அவரை நேரில் பார்த்துப் பேசும். போம்.

* * *

குமாஸ்தா, குப்புசாமிப்பிள்ளை வெளியேறியவுடன், முதலியாரின் மனைவி மரகதத்தம்மாள், சாப்பிட அழைக்க வருகிறாள்.

க:- மரகதம், பார்த்தியா, நாடகத்தை......

மரகதம்:- எந்த நாடகத்தை...

க:- குப்புசாமிப்பிள்ளை ஆடிய நாடகத்தை......

ம:- புரியலிங்களே.

க:- மரகதம், அவ எனக்கொண்

னுமே தெரியாதுன்னு, எதிரில் வந்தால் வேஷம் போட்டான். இப்போ, அவன், நாடகத்திலே, பழையகால ராஜாக்களுக்கு வருகிற 'ஆமாம்' போடும் மந்திரி வேஷம் போட்டான். கனஜோராய் நடித்தான்.

ம:- என்னங்க, அவரைப்போய் அப்படிச் சொல்லாதிங்க.

க:- போடி, போ, இப்போ, நேரே, வீட்டிலே போய்ப்பாரு, வேஷங்கலைந்த கூத்தாடி மாதிரி, என்னைத் திட்டிகிட்டிருப்பான்.

ம:- அவரைப்போய் கூத்தாடின்னு சொல்றிங்க. அவருக்கு கூத்து, ட்ராமா, சினிமான்னு துளியும் பிடிக்காது.

க:- அவனேதான் தினமும் நிமிடத்திற்கு நிமிடம் கூத்தாட்ரானே—அவனுக்கே, ஏன் கூத்தும், நாடகமும் சினிமாவும் பிடிக்கப்போகிறது!

ம:- அப்போ, நீங்கமட்டும், கூத்தாடியில்லையோ—அண்ணைக்கு, முனுசாமிமுதலியார் வந்திருந்த பொழுது குப்புசாமிப் பிள்ளையை அப்படிப் புகழ்ந்தீர்களே!

க:- எல்லா பயல்களும் தான் நின்னுட்டான்களே, இருக்கிறவன் இவன் ஒருத்தன்தான். பின்னே, என் கிட்டேயிருக்கிற இந்த ஆளும், மிசுமிக மட்டம்னு ஊரிலெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டு வரச் சொல்றியா?

* * *

குமாஸ்தா குப்புசாமிப்பிள்ளை, நாடக காண்ட்ராக்ட்டே எடுத்து விட்டார், கடைசியில். நாடக கம்பெனி நாகரத்தினத்திடம் அவர் பேசியதைக் கேட்டால், சிரிப்பு தானே வரும்.

நாகரத்தினம்:- ஏங்க, உங்களுக்குப் பிடிக்காத விஷயத்திலே, வீண் சிரமம் எடுத்துக் கொள்ளாதிங்க.

கு:- நாடகம் எனக்குப் பிடிக்காதுன்னு யார் சொன்னது? அந்த காலத்திலே, சம்பூர்ண ராமாயணத்திலே நான் ராவணனு வரேன்னு, எவ்வளவு பேர்.........

நா:- நீங்க ராவணன் போட்டது எனக்கும் தெரியும். ஒருதடவை கல்லாலடித்து, கூத்தே குழப்பமாயிடல்லே.

கு:- அது வேறுகதை—அந்தப் பயல் கந்தன் செய்த காலித்தனம் அது. இப்ப நீங்க சொல்லுங்க, எனக்கு ஆறு ஆட்டம் போட்டுத் தந்தாகணும். எனக்கு ரொம்ப சிரமம்—இதிலிருந்துதான் எப்படியாவது என்னை நான் சரிசெய்து கொள்ளவேணும்.

நா:- கடைசியில் நாடகந்தான் உங்களுக்கு கை கொடுக்க வேண்டியதாயிற்று!

கு:- ஆறு ஆட்டங்கள்—ஆமாம்.

நா:- அவரைக் கேட்டீங்களா?

கு:- முதலாளி ஐயாவைத்தானே....அவர்கிட்டே, ஏதாவது புளுகி, கூத்தாடி ஒத்துக்கவைக்கிறேன். அதுபற்றி உங்களுக்கு கவலே வேண்டாம்.

நா:- நானும் ஒரு வார்த்தை கேட்டுக் கொள்றேன்.

கு:- ஆகா, பேஷாய்......

நா:- சரி, நாடகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்க.

கு:- அப்பாடா.

* * *

தன் பிள்ளை பள்ளிக்கூடத்தில் நாடகம் ஆடுவதைக் கண்டித்தார் குப்புசாமிப்பிள்ளை. நாடகமே, பிள்ளைகளைக் கெடுத்துவிடும் என்று சிறிவிழுந்தார். கூத்தாடிப் பிழைப்பு நமக்கு வேண்டாம் என்று போதனை புரிந்தார். ஆனால் வாழ்க்கையில், அவர் நடிப்புகளை தினமும் நடமாடுகிறார். ஆளுக்குத் தகுந்தமாதிரி வேஷம் போடுகிறார். வேளைக்குத் தகுந்தமாதிரி பேச்சு பேசுகிறார். முதல் சீனில் பிச்சைக்கார வேடத்திலே வந்த நடிகன், அடுத்த காட்சியில் ஜமீன்தார் வேடம் போட்டு வருவதைப்பார்க்கிறோம். ஆனால் குப்புசாமி, அதை வாழ்க்கையில் தினமும் செய்துகொண்டிருக்கிறார். அவரைக் கூத்தாடி யென்று கூறுவதில்லை. இரவானதும் விளக்கைப்போட்டு, பவுடரைத் தடவிக்கொண்டு, மூன்று மணி நேரம் ஆடிப்பாடுவோரை மட்டும், கூத்தாடிகள் என்கிறார்கள். இவர்கள் பகலிலேகூட பவுடரில்லாமல், வேடம் கட்டாமல், நடிக்கிறார்கள். இந்த வாழ்க்கைக் கூத்தாடிகள்எவர் கண்களிலும் படுவதில்லை. இதுதான் உலகம் — நாடகமே உலகம், நாளை நடப்பதை யாரறிவார் என்றபழைய ரிகார்டு அவர் வீட்டில் அடிக்கடி பாடிக்கொண்டிருக்கும். அதனைக் கேட்டு, கேட்டு செவி மரத்துப் போனவர் குமாஸ்தா குப்புசாமிப் பிள்ளை!

★


விற்பனையாகிறது:

| | | |
|---|---|---|
| மக்கள் தீர்ப்பு | ... | 0-8-0 |
| ஜெபமாலை | ... | 0-8-0 |
| சாது | ... | 0-8-0 |

அச்சில்

வள்ளிநாயகியின் கோபம்

வெளிவந்துவிட்டது!

சி. என். ஏ. தீட்டிய

வாழ்க்கைப் புயல்

3-ம் பதிப்பு] [விலை 12 அணா

பரிமளம் பதிப்பகம் 17-B. வரதுவாசல்தெரு காஞ்சிபுரம்.

வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.

வி. பி. பி. இல்லை.

முன் பணம் அனுப்புக.

தபாற் செலவு தனி.

திராவிடநாடு

காஞ்சி] 20—7—52 [ஞாயிறு

## கூனூரில் கூடாதாம்!

★

கூனூரிலுள்ள உணவு சத்து ஆராய்ச்சி நிலையத்தை ஹைதராபாத்துக்கு மாற்றும் யோசனையைக் கைவிடும்படி கேட்க 9—7—52ல் சுகாதார மந்திரியைப் பேட்டிக் கண்டனர், தமிழ் நாட்டு உறுப்பினர்கள். டில்லி மந்திரியாரோ, மறுத்துவிட்டார்.

தோழர் பேபி கந்தசாமியும், மற்றும் தோழர்கள் எஸ். வி. ராமசாமி, வி. வி. ஆர். என். ஏ. ஆர். நாகப்பா, சி. ஆர். நரசிம்மன், எம். சந்திரசேகர், பி. கக்கன், எஸ். பாலசுப்ரமணியம், கே. சக்திவடிவேல், பி. நடேசன், என். சத்தியநாதன் ஏ. ஜெயராமன் ஆகியோரும் கையொப்பமிட்டு அனுப்பியிருந்த விண்ணப்பத்தின் கருத்தைக் கீழே காணுங்கள்.

"சென்னை ராஜ்ய உறுப்பினர்களான நாங்கள், கூனூரிலுள்ள உணவு சத்து ஆராய்ச்சி நிலையத்தை வேறோரு இடத்திற்கு மாற்றுவதை எதிர்க்கிறோம். இது சம்மந்தமாக, சபையில், சுகாதார மந்திரி 23—6—52ல் 11 31 கேள்விக்கு பதில் தரும் முகத்தான் தந்துள்ள காரணங்கள் தெளிவாகவோ, திருப்தி தருவதாகவோ, உண்மையானவைவையாகவோ தெரியவில்லை. மத்திய சர்க்காரின் பண உதவியோடு, நடைபெறும் நிலையம், சென்னை ராஜ்யத்தில் அது ஒன்றே ஒன்றுதான் என்று கருதுகிறோம். அது அங்கு நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. 'இந்து' பத்திரிகையில் இதுபற்றி எழுதப்பட்டுள்ளதால், இடம் மாற்றும் யோசனைக்கு எதிர்ப்பாகவே மக்கள் கருத்தும் இருக்கிறது. ஆகவே, இதுபற்றி மீண்டும் யோசனை செய்து, இடம் மாற்றும் யோசனையைக் கைவிடும்படி வேண்டுகிறோம்"

விண்ணப்பம் சென்றது — அழைப்பு வந்தது, மந்திரியாரிடமிருந்து. சென்றனர். கண்டனர். ஆனால், முடியாது, மாற்றித்தான் தீருவோம் என்ற மமதையான பதிலைக் கேட்டுத் திரும்பினர். திராவிடத்தின் நிலை இது—தெரிந்து கொள்ளுங்கள்.

★

### பொதுச் செயலாளருக்கு வரவேற்பு

28—7—52ம் தேதியன்று, இடைப்பாடிக்கு வர இருக்கும் சி. என். ஏவுக்கு இடைப்பாடி பஞ்சாயத்து போர்டார் ஒரு வரவேற்பு வாசித்தளிக்க முடிவு செய்துள்ளனர்.

❀

## டி. என். ராமன் மறைந்தார்

—❀—

சுயமரியாதை இயக்கத்தின் ஆரம்ப காலத் தூதர்களை எண்ணினால் நமது இதயங்களில் குதூகலம் ஏற்படும்! அவ்வளவு ஆர்வமும், வீரமும், திறமையும் கொண்ட நல் உள்ளங்கொண்ட பொது வாழ்வினர், அவர்கள். கல்லுக்கும் சொல்லுக்கும் ஆட்பட்டு, அவர்கள் அடைந்த இன்னல்கள் ஏராளம். அதனால் தான், அவர்களைக் காணும்போதும், பேசும்போதும், நமக்கு அலாதியான மரியாதையும், மதிப்பும் ஏற்படுவதுண்டு. அன்று அவர்கள் இயக்கத்தில் தோற்றுவித்த, குடும்பப்பாசம், இன்று மலைபோல் உயர்ந்துவிட்டது! அந்தக் குடும்ப பாசத்தோடு பழகிவந்த சுயமரியாதைச் செல்வர் திருவாரூர் டி. என். ராமன் அவர்கள் கடந்த 15-7-52 அன்று நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் என்கிற செய்தி கேட்டதும், திடுக்கிட்டோம். நம்மால் நம்பவே முடியவில்லை! சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டு, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும், உடல்தேறி வருவதாகவும் செய்திகள் வந்த நேரத்தில், இத்தகைய தகவல் வரின் என்னவென்று எண்ணுவது? அந்த கம்பீரமான உருவம், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சடலமாகக் கிடந்ததாம்! வீழ்வுற்ற இனத்தின் எழுச்சி கண்டுபூரித்த அவரை, இனி நாம் காணமுடியாது — பேசமுடியாது—ராமன் இங்கு இல்லை! அவர் போய்விட்டார்!!

திருவாரூர் இன்று அறிவுக் கோட்டையாக விளங்குகிறது என்றால், அதன் பெருமைக்குரியவர்களில் நண்பர் டி. என். ஆர்–க்கு சிறப்பிடம் உண்டு. இன்று, பொதுப்பணியில் ஆர்வமுடன் முன்னிற்கும், இளைஞர்கள் — அவரால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாகும். இசை வேளாளர்களிடையே தீவிரமான முன்னேற்ற உணர்ச்சி, பெருக்கெடுத்தமைக்கு மறைவுற்ற தோழரின் பொதுப்பணி, மிகவும் காரணமாகும். திருவாரூரில் மட்டுமின்றி, சென்னை, சேலம் முதலாய இடங்களிலெல்லாம் அவர், பகுத்தறிவுக் கொள்கைக்காக பணியாற்றியிருக்கிறார். 45-வயது! அதற்குள் அவர், உலகமேட்டில் உலவிய பொன்வண்டாக இருந்தார். போய்விட்டார். 'பாரதிதாசன் நிதி'க்காக அவர் எடுத்துக் கொண்ட பெருமுயற்சிகளை, நாடு, அறியும். 'லிபிரேடர்' ஆங்கில தினசரியின் நிர்வாகியாகவும், "குயில்" வார இதழின் ஆசிரியராகவும் இருந்து பணியாற்றியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கியபோது, சில காலம்வரை 'மாலை மணி'யின் மானேஜராகவும், இருந்தார். நமது கழக செயற்குழு உறுப்பினராகவும் இருந்து, அரிய யோசனைகளை, அடிக்கடி தெரிவித்த தீரர், அவர். அத்தகைய ஒரு நல்ல நண்பர் போய்விட்டார் என்பதை எண்ணும்போது நம்மால் தாங்கமுடியவில்லை! இதயத்தைப் பீறிட்டுவரும் நமது துக்கத்தை நாம்தானே தாங்கிக்கொள்ளவேண்டும்?—இந்த ஆற்றலை மறைந்த நண்பரின் துணைவியாருக்கும் அவரது தம்பி டி. என். லட்சப்பாவுக்கும் மருகன் டி. வி. நமசிவாயத்துக்கும், ராஜகோபாலுக்கும் குடும்பத்தாருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

# அலுப்புக்கோட்டை

சென்ற இரண்டு வாரங்களாக, அரசியல் வட்டாரத்தில் அருப்புக் கோட்டையைப் பற்றியே பேச்சாகி விட்டது.

கோட்டை விடாதீர்கள் — அருப்புக் கோட்டையை விடாதீர்கள் என்று ‘கல்கி’யார் இந்த அருப்புக் கோட்டை விஷயத்தை ஆரம்பித்து வைத்தார். அருப்புக்கோட்டை அறுப்புக் கோட்டையாகிவிட்டது, கழுத்தறுப்பாகிவிட்டது, காங்கிரசுக்கு, என்ற செய்தியைத் தந்தது, தேர்தல். அதனை வெளியிட்ட எதிர்க்கட்சி ஏடுகள் இப்படித் தீட்டின.

அருப்புக்கோட்டை, காங்கிரசாரிடையே ஒரு அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டது. ஆகவேதான் அவர்கள் அதுபற்றிப் பேசிக் கொண்டேயிருக்கின்றனர்.

எதிர்க் கட்சிக்காரர்களோ, விடுவதாக இல்லை — அருப்புக்கோட்டையைக் காட்டி, அடிக்கடி இடித்துரைத்த வண்ணமிருக்கின்றனர்.

ஆனால், அருப்புக்கோட்டையில் காங்கிரஸ் தோல்வி. என் தோல்வி, நான் வேண்டுமென்றால் காங்கிரசுக்கு ஓட்டுபோடுங்கள் என்றுபேசிய ஆச்சாரியார் இப்பொழுது அருப்புக்கோட்டையை விட்டு நெடுந் தொலைவு சென்றுவிட்டார்.

‘அருப்புக்கோட்டை’ முடிந்த பிறகு அவர் பேசியுள்ள பேச்சுக்களைப் படித்தாலே தெரியும். அவர் இந்தப் பதவி ஏற்ற நேரத்தில் பேசியுள்ள பேச்சுக்களிலே உள்ள தெம்பும், வம்பும் இவைகளில் இல்லை. எதிர்க்கட்சிக்காரர்களைக் கிண்டலும் கேலியும் செய்தார் ஆரம்பத்தில். தானேபெரியவன், தனக்கிணையேது என்ற முறையிலேயே, பேசினார், அவர் முதன் மந்திரியானவுடன். இப்பொழுது அடக்க ஒடுக்கமாகப் பேசுகிறார்!

எதிர்க்கட்சித் தோழர்கள், அடிக்கடி சவால் விடுகிறார்கள் — கவர்னர் நியமனமாக வந்துள்ள ஆச்சாரியாரை, தேர்தலில் நின்று பார்க்கட்டும் என்று கூவியழைக்கின்றனர். டிப்பாசிட்டை இழந்து தவிப்பார் ஆச்சாரியார் என்று கூறுகின்றனர், ஆச்சாரியார் சவாலை ஏற்கமுடியவில்லை. ஏற்று தேர்தலிலே நின்றுவிட்டாலோ, காங்கிரஸ் வட்டாரத்தில் இன்றுள்ள செல்வாக்கு குறையும். தேர்தல் என்றாலே, சிலரிடம் பல்லைக் காட்டியே தீரவேண்டியிருக்கும் என்று ஆச்சாரியார் தவிக்கிறார். ஏன் இந்த வீண்வம்பிலே மாட்டித் தவிக்கவேண்டும் என்று எண்ணுகிறார். ஆனால், எதிர்க்கட்சி விடும் சவாலை, தைரியமாக ஏற்கமுடியாவிட்டாலும், அது நியாயமானது என்று உணர்கிறார். ஆகவேதான் அவர் பேச்சில் வர வர களைப்பு தென்படுகிறது.

முன் அவர் முதன் மந்திரியாக இருந்தபொழுது, சட்டசபையில் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசும் பேச்சுக்களுக்குப் பதில் சொல்லுகையில், என்னைத் தாக்கிப் பேசுவோர் பக்கம், என் கேளாக் காதைத்தான் திருப்புவேன் என்று ஆணவத்தோடு கூறினார். ஆனால் இப்பொழுது, கேளாக்காது கேட்கிறது. கேட்பது மட்டுமல்ல, எதிர்க்கட்சிக்காரர்கள் பேசும் பேச்சைக் கேட்டு, கோபங்கூட வருகிறது!

அவர் என் செய்வார் — பாவம்! இத்தகைய அனுபவம் கிடையாது. முன் அவர் குரல் கேட்டால் எழுந்து கைகட்டி வாய் பொத்தி நிற்கும் சட்டசபை உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர் விரல் அசைந்தால், கை தூக்கினார்கள். இப்பொழுது அவருக்குள்ள வேலை, ஆள்தேடும் படலம்தான். எத்தனை பேரை காங்கிரசுக்கு ஒத்துழைக்கும்படிச் செய்யலாம் என்பதே! முயற்சிக்கிறார். முடியவில்லை.

அதுவும், ஒவ்வொரு, தீர்மானம் சட்டசபை முன் கொண்டுவரப்படும் பொழுதும், ஆள்களைச் சேர்ப்பதென்றால், அவர் என்ன செய்வார் சலிப்பு தட்டாமல்.

‘கல்கி’யார் கூறியிருப்பதுபோல, இப்பொழுது காங்கிரசை ஆதரிக்கிற ரங்கா கட்சி, முஸ்லீம் லீக், காமன் வீல் கட்சி போன்றவை ஒவ்வொரு தீர்மானத்தின் பொழுதும், தமக்குப் பிடிக்கவில்லையென்றால் எதிர்க்கத்தான் செய்யும். அப்பொழுதெல்லாம், அவர்களை ‘தாஜா’ செய்யவேண்டும். இப்படியே எத்தனை நாட்களுக்கு நடக்கும் என்று ஆச்சாரியார் யோசித்தாரானால், அவருக்கு ஆர்வமா, பிறக்கும் — அலுப்புதானே தோன்றும்!

நமக்கு ஏன் இந்த வீண்வேலை — எத்தனையோ பதவிகளிலிருந்து விட்டோம். அனுபவித்து விட்டோம். அவசியமில்லாமல், இந்த மாகாணப் பிரதமராகி, இப்படித் தவிக்கவேண்டும் என்று எண்ணாமலா இருப்பார்! ஆம், எண்ணிக் கொண்டுதானிருக்கிறார். அவர் அருப்புக் கோட்டையை விட்டு, அலுப்புக் கோட்டைக்கு குடி போய் விட்டார்! இதை அறியாமல், ‘தினமணி’ திருவாளர்கள் தெந்தினா பாடுகிறார்கள்.

❁

## கழகத் தேர்தல்கள்!

தோழர்களே,

கழக நிர்வாகிகள் தேர்தல் ஆகஸ்ட் 1-ந் தேதி முதல் நடைபெற ஏற்பாடாகிக்கொண்டு வருகிறது. ஆகஸ்ட் முதல் வாரத்தில், தஞ்சை, ராமநாதபுரம், கோவை ஆகிய மாவட்டங்களில் தேர்தல்கள் நடைபெறும்.

தலைமை நிலையத்திலிருந்து, தேர்தல் சம்மந்தமாக கிளைக் கழகங்களுக்கு அனுப்பப்படும் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

ஆகவே, தோழர்கள் தேர்தல்கள் நடத்துவிக்கத் தயாராக இருக்கவேண்டுகிறேன்.

—அண்ணாதுரை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இவரோ, 'ஆராரோ' பாடி அழைக்கிறார் மக்களை. அதற்கு சினிமா வேண்டாம்—அந்தக்காசை இங்கே போடு' என்கிறார். அல்பசுபாவம்—என்று கூறத்தோன்றும். ஆனால் இது அந்தரகத்தது, அல்ல—ஆபத்தான சுபாவம்! வேதமந்திரங்களை ஓதித் தேன் பால் புகட்டினாலும் வேம்பு கரும்பாகிவிடாது! வெண்மையான சீனியைக்கொட்டி வளர்ப்பதால் வெள்ளெருக்கு மணமுள்ள மலர் ஆகிவிடாது! மந்திக்கு அனுதினமும் பாலாபிஷேகம் செய்து பட்டாடை போர்த்துவதால் மனித குணம் பெற்றுவிடாது! அதைப்போல, சற்குணமில்லாதவரிடம் இருக்கும் சண்டிக் குணம் எளிதில் மாறிடாது. இடமும், இயல்பும், பதவியும், அறிவும் — இயற்கைக் குணத்தை மாற்றிவிடாது. அதையே, ஆச்சாரியாரும், மெய்ப்பிக்கிறார். சாக்கடையென்று ஒரு சமயம் கூறினாலும், அதற்கே உறுப்பினர் திரட்டுகிறார்! சலிப்பு நேரத்தில் ஒன்று — சந்தோஷ நேரத்தில் மற்றொன்று. இதுவே சனாதனப் பரம்பரையின் சாணக்யப் புத்தி என்பர். இதற்கு, இவர், மட்டும், விதிவிலக்கா, என்ன? காங்கிரசுக்கு உறுப்பினர் சேர்க்க, பொதுக் கூட்டத்தில் பேச வந்த முதலமைச்சருக்கு, கம்யூனிசத்தின் மீதும் களவு கொலை மேலும், பிறகு சினிமாவின் மீதும், சீற்றம் வந்து அடங்கியிருக்கிறது. சினிமாக்கள், மூலம்—கெட்ட எண்ணம் உற்பத்தியாகி பரவுகிறதாம்! படு கொலை நடக்கிறதாம்! களவும் காமமும் வளர்கிறதாம்! கூறுகிறார் அவர். கிருஷ்ணலீலை, திருமங்கை ஆழ்வார், சிறுத்தொண்டன், இயற்பகை...இப்படிப்பட்ட கதைகளை வைத்துக கொண்டு! காமரசமும் களவுத்துணிவும், கொலை வெறியும் தூண்டும் நூல்கள் 'பக்தியின் பாதை'கள்!! ஆனால், கலை உலகின் சாதனம், தீமை பயக்குமாம்!!! கடவுளரின் கதைகளை நீங்களே — அறிவீர்கள். இருந்தும், ஏன், சினிமாமீதுபாய்கிறார், இந்தச் சீலர்? சற்குணமா! சண்டித்தனமா!!

★



தோழர் W. P. A. சவுந்தரபாண்டியன் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்ட அருணசலம் (காஞ்சி-கலியாணசுந்தரம் அவர்கள் திருமகன்)—சரசுவதி தம்பதிகள். மேற்படி வாழ்க்கை விழாவன்று மணமக்களை வாழ்த்தி தந்திமூலமும் தபால்மூலமும் செய்திகள் அனுப்பிய தோழர்களுக்கும், மணவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த நண்பர்களுக்கும் தோழர் காஞ்சி-கலியாண சுந்தரம் அவர்கள் தனது அன்பு கனிந்த நன்றியையும் வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறார்.


## அண்ணாவின் அரிய நூல்கள்

| | |
|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2—4—0 |
| கம்பரசம் | 1—8—0 |
| சபோதிபுரக் காதல் | 1—4—0 |
| குமரிக்கோட்டம் | 1—0—0 |
| பணத்தோட்டம் | 1—0—0 |
| உலகப் பெரியார் காந்தி | 1—0—0 |
| கற்பனைச்சித்திரம் | 1—0—0 |
| சிறு கதைகள் | 1—0—0 |
| தீ பரவட்டும் | 1—0—0 |
| ஆறு கதைகள் | 1—0—0 |
| 1858—1948 | 1—0—0 |
| ஆரியமாயை | 1—0—0 |
| இலட்சிய வரலாறு | 1—0—0 |
| அறப்போர் | 1—0—0 |
| வர்ணாஸ்ரமம் | 0—12—0 |
| நிலையும் நினைப்பும் | 0—12—0 |
| மே தினம் | 0—5—0 |
| அவர்கள் சந்திப்பு | 0—3—0 |

### அரங்கண்ணல்

| | |
|---|---|
| இதயகீதம் | 0—12—0 |
| ரஸ்புடீன் | 1—8—0 |
| ரோம் | 1—8—0 |

### மு. கருணாநிதி

| | |
|---|---|
| விடுதலைக்கிளர்ச்சி | 1—0—0 |
| பூந்தோட்டம் | 0—4—0 |

### சி. பி. சிற்றரசு

| | |
|---|---|
| கொலம்பஸ் | 1—0—0 |

### மதியழகன்

| | |
|---|---|
| அறிவின் தூதர்கள் | 0—12—0 |
| நன்றி யாருக்கு? | 1—0—0 |

### தில்லை-வில்லாளன்

| | |
|---|---|
| இருளும் ஒளியும் | 1—8—0 |

### வாணன்

| | |
|---|---|
| ரஷ்ய இலக்கியம் | 1—8—0 |

## திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி

## தி. மு. க. நிகழ்ச்சிகள்

28—6—52 பல்லாவரம். தோழர் என். வி. நடராசன் தலைமையில் தோழர் ஈ.வி.கே. சம்பத் சொற்பொழிவாற்றினர்.

29—6—52 காஞ்சி — பிள்ளையார் பாளையம் வேலாயுதம் படிப்பகத் திறப்புவிழா தோழர் அண்ணாதுரை தலைமையில் தோழர்கள் ஈ.வி.கே. சம்பத், பொன்னம்பலனார் சொற்பொழிவாற்றினர்.

6—7—52 காஞ்சியில் வரி எதிர்ப்பு தினப் பொதுக் கூட்டம் கம்யூனிஸ்ட் தோழர் கே. எஸ். பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்றபோது கம். பாலசுப்பிரமணியமும் தி. மு. க. சார்பில் தோழர்கள் காஞ்சி. கலியாணசுந்திரம், அரங்கண்ணல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

6—7—52 சித்தூர் தி. மு. க. பொதுக்கூட்டம் தோழர் வில்லாளன் தலைமையில், தோழர் ஈ. வி. கே. சம்பத் பேசினர்.

23-7-52 வேலூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழியர் அருண்மொழி தலைமையில் தோழியர் பூங்கோதை பேசிய பிறகு தோழர் ஈ. வி. கே. சம்பத்சொற்பொழிவாற்றினர்

14—7—52 உத்திரமேரூர் தி மு.க. துவக்கவிழா தோழர் அரங்கண்ணல் தலைமையில் தோழர் சி.வி.எம். அண்ணாமலை பேசிய பிறகு தோழர் ஈ. வி. கே. சம்பத் சொற்பொழிவாற்றினர்.

### மு. கருணாநிதி

| | | |
|---|---|---|
| ஜூலை | 23 | அய்னாவரம் (சென்னை) |
| | 27 | கொல்லுமாங்குடி. |
| ஆக. | 8 | முக்கூடல் |
| | 10 | பட்டிவீரன்பட்டி |
| | 11 | உசிலம்பட்டி |

## மேட்டுப்பாளையம்

(தஞ்சை)

தி. மு. க. ஆண்டு விழா

20-7-52 ஞாயிறு காலை 10 மணிக்கு

தலைவர்: V. சின்னத்தம்பி

படிப்பகத் திறப்புவிழா

சி. என். அண்ணாதுரை

ஈ. வி. கே. சம்பத், N. S. இளங்கோ, அரங்கண்ணல் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இரவு 'மக்கள் ஆட்சி' நாடகம் சி. என். ஏ. தலைமையில்.

---

21-7-52 திங்கள் இரவு முதியோர் கல்வி நிதிக்காக 'தேச பக்தி' நாடகம்.

> தி. மு. கிளைக் கழகங்கள் நடத்தும் பொதுக் கூட்ட நிகழ்ச்சிகளின் விபரத்தைத் தலைமை நிலயத்துக்கும், அதோடு நமக்கும் உடனுக்குடன் அனுப்பி வைக்கக்கோருகிறோம்.
>
> ஆசிரியர்.

## மஜீத் நிதி

மஜீத்நிதி இன்றுவரை(17-7-52) ரூ. 1897—1—1 சேர்ந்திருக்கிறது. 20—7—52 தான், மஜீத் நிதிக்கு கடைசி நாளாகக் குறிப்பிடப் பட்டிருந்தாலும், தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, கடைசி நாளை தள்ளிவைக்க வேண்டியதாகி விட்டது. மஜீத் நிதிக்காக, தென்னார்க்காடு மாவட்டத்திலேயே, ஆகஸ்ட் முதல்வாரத்தில் ஒரு நாடகம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.கிடைக்கும் மொத்த தொகையைக்கொண்டு, ஒருநிலையான உதவியளிக்கும் வகையில் நிலமாக வாங்கித்தர யோசிக்கப்பட்டு வருகிறது. ஆகவே நாடகம் நடத்தப்படும் தேதிவரையில் இன்னும், மஜீத் நிதிக்கு உதவாத தோழர்கள் விரைந்துநிதியளியுங்கள்.

| | |
|---|---|
| முன்வரவு ரூ. | 1486—15—10 |
| கவுண்டன்பாடி ஆர், துரை | 3-0-0 |
| பல்லடம் தி. மு. க. | 3—0—0 |
| மதுராந்தகம். எம். வேணு | 4—0—0 |
| சிந்தாதிரிப்பேட்டை தி. மு. க. | 8—0—0 |
| சென்னை தமிழ்மன்ற உறுப்பினர் சார்பில், சி. டி: தனபால் மூலம் | 6—8—0 |
| மாதவாக்கம் ஜமால்பாட்சா | 1—0—0 |
| காரைக்குடி ராமசுப்பையா மூலம் | 17—0—0 |
| சென்னை ஏ.கே.சிவபூஷணம் மூலம் | 15-15-0 |
| சித்தூர் பொதுக் கூட்டத்தின் மூலம் | 6—2—3 |
| இடைப்பாடி தி. மு. க. | 10—0—0 |
| கல்லிடைக்குறிச்சி தி.மு.க. | 7—6—0 |
| நீலகிரி எம்.கண்ணையாமூலம் | 14—1—0 |
| நிலக்கோட்டை ஏம் எஸ் நடராசன் | 3—0—0 |
| குருவம்புலம் பி. எஸ். நடேசன் | 2—0—0 |
| சென்னை அன்பில் அபூபக்கர் மூலம் | 9—8—0 |
| குன்னம்பட்டி தி. மு க. | 5—0—0 |
| வேலூர் கஸ்பா பொதுக் கூட்டத்தில் | 1-15-0 |
| செங்கப்பட்டு கோவிந்தன் | 0—8—0 |
| ,, பர்வதம்மாள் | 0—8—0 |
| செந்துறை எஸ். அப்துல் ஹமீத் | 10—0—0 |
| குன்த்தூர் தி. மு. க. | 3—0—0 |
| அங்கலாங்குறிச்சி இப்ருஹிம் | 1—0—0 |
| பரமக்குடி ஏ. எம். அப்துல் வகாப் | 1—0—0 |
| திருவேலியூர் பி.சங்கரப்பா | 1—0—0 |
| ,, எம். சங்கையா | 0—8—0 |
| துறையூர் நாடக வசூல்— அழகமுத்து மூலம் | 6—4—0 |
| மீர்சாகிப்பேட்டை தி. மு. க. கிளை | 11—0—0 |
| தேவாரம் எம். ராசாராம் | 0—8—0 |
| வல்லவராயன்பட்டி தி மு க | 2—8—0 |
| கிருஷ்ணபுரம் பி. டி. செல்லசாமி | 1—0—0 |
| அருப்புக்கோட்டை சிவசண்முக சுந்தரன் | 30—0—0 |
| அகமதாபாத் தி. மு. க. | 24—0—0 |
| நகரி ஏ. நடேசன் | 1—0—0 |
| சிங்கப்பூர் சையத் இப்ராகிம் | 2—0—0 |
| வெள்ளனூர் தி. மு. க. | 5—0—0 |
| கம்பரசம்பேட்டை பி. முத்துசாமி | 1—0—0 |
| கோயமுத்தூர் செல்வராசன் | 2—0—0 |
| பெங்களூர் தி. மு. க. | 12—8—0 |
| சென்னை ஜோசப் நினைவு நூலகத்தார் | 8—2—0 |
| சென்னைமாவட்டக் க. நிதி | 65—0—0 |
| கொழும்புத் தோழர்கள் | 100—0—0 |
| | 1897—1—1 |

# சற்குணமா? சண்டித்தனமா?

தண்ணீர்க் குடமேந்திச் செல்லுகிறாள், அத்தையல் — காட்டுப் பாதையில் துள்ளிச் செல்லும் மான்போல. தலையிலே இருக்கும் குடத்தை, அவளது இரு கரங்களும் தாங்கிக்கொண்டிருப்பதால், மேலாடை சிறிது நழுவிக் கிடக்கிறது. அந்தப் 'போஸ்'!—அவனை, லாகிரி கொள்ளச் செய்கிறது. மெதுவாக, அவள்பின் போகிறான். சடையைப் பிடித்து இழுக்கிறான். கோபத்தோடு திரும்புகிறாள், அந்தக் கோமளாங்கி! குறும்புச் சிரிப்போடு முறைக்கிறான், அந்தக் குமரன்!

*

"என்ன அக்கிரமம், இது! ஏண்டா நீ இப்படிச் செய்யலாமா?"

"அக்கிரமம் என்னடி, இதில்? அழகு மலரே! உன் ரூபம் என்னைப் பரவசமாக்கிற்று. பழத்தைச் சுவைக்கப் பதைக்கிறேனடி, நான்!"

"பரஸ்திரீயை இச்சிக்கலாமோ, நீ?"

"மயங்கிவிட்டேன், மானே. கார் போன்ற உன் கூந்தல் என்னைக் கவர்ந்துவிட்டதடி! அதன் கவர்ச்சியில் மயங்கிய என்னை, உனது 'அங்க' அமைப்பு மயக்கிவிட்டதடி!'

"அதற்காக இப்படிச் செய்வதோ?"

"தளிர்ச் சோலையில் திரியும், மதம் பிடித்த யானைபோல, நிமிர்ந்து நிற்கும் உனது அங்கம் என்னை அதட்டிப் பார்ப்பதை, அறியவில்லையோ, நீ?"

"பாயும் யானைகளைப் பிடித்து அடக்கு. அது, முறை. அதை விட்டு விட்டு, பாபம், என் சடைக்குத் தாலாமோ தொல்லை?"

*

செச்சே! எவ்வளவு விரசம்! ஆபாசம்! இப்படியெல்லாமா எழுதுவது. எழுத்தா, இது? காமரசம்! வாலிபத் துடிப்பில் வந்ததையெல்லாமா எழுதிவிடுவது! இளைஞர்களைக் கெடுக்குமே இந்த எழுத்து. இதை விடுவதோ! எங்கே, சட்டம்? கொட்டுங்கள் இவனை! அசிங்கம்— அசிங்கம்!,—என்று கூறுவர், ஆச்சாரியாரின் திருக்குழாம். அவர்களுக்கு, கூறுகிறேன். அன்பரீர்! இது, நமது சரக்கல்ல! கடவுள் காதையிலிருப்பது! வடமொழியிலுள்ள 'சுலோகம்' ஒன்றின் அசல் மொழி பெயர்ப்பு. "கிருஷ்ண லீலா"—ஒரு சிறு கட்டம். பாகவதர் பாட, ஜனக்கூட்டம், 'ச்சு, ச்சு' கொட்ட, 'ராதா கல்யாணம்' நடக்கிறதே, அங்கு இதுபோலப் பலப் பலக் கேட்கலாம். பக்தி ரசமாம், இது! பரவசத்தோடு கூறுவர், பாகவதப் பாதந்தாங்கிகள். 'காம ரசம்' இதுவன்றோ என்று நம் போன்றோர் கேட்டால், சீறுவர்! 'பாபி' என்பர்! பழிக்கிறாயோ பதிதா — என்று சினந்துகொள்வர்! அவர்களை, பணிவோடு, கேட்கிறோம். வழியில் செல்லும் பெண்ணை வாதுக்கழைப்பதும், அவளது 'மார்பகத்தை' மதம் பிடித்த யானை என்பதும், அதற்கு அவள் 'யானையைப் பிடித்து அடக்கேன்' என்று மறுமொழி தருவதையும் என்னவென்று சொல்வீர்! பக்தி — ஒருபக்கம் இருக்கட்டும். இந்தப் பூலோகத்தில் இன்று, இப்படியொருகாட்சி, நடைபெற்றால்— அதுவும் நடுவீதியில் — என்னவென்று அழைப்பீர்? காமச் சேட்டை — வேறென்ன சொல்ல முடியும்! இத்தகைய 'சேட்டை'யைப்பற்றி, நாள்தோறும், பலப்பல இடங்களில் காலேட்சம்! பாடநூல்கள் இவை! இந்தக் 'காமரச காட்சிகள்'—கலக்கவில்லை, அன்பர் ஆச்சாரியார் இதயத்தை. உலுக்கவில்லை, அந்த ஊராளும் பெரியவரை! ஆனால், சினிமாக்கள் மூலம்தான் கெட்ட எண்ணம் பரவுகிறதாம். சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிலே செப்பியிருக்கிறார். 'சினிமா' வெளிவருமுன் 'சென்சார்' என்ற ஒன்று இருக்கிறது—அது தெரியும் அவருக்கு. ஆனாலும் சொல்கிறார்! சினிமாக்கள் மூலமே கெட்ட எண்ணம் பரவுகிறதாம். அதிலும் எத்தகைய கெட்ட எண்ணம் தெரியுமா? அவர் கூறுகிறார், கேளுங்கள்.

"அங்கு போய்விட்டுத்திரும்பினால் புத்திகெட்டுவிடுகிறது. வரும்போதும் அந்தப்பக்கம் இந்தப்பக்கம் பார்த்து நடக்கவேண்டியிருக்கிறது. சினிமாப் பார்த்து பார்த்து உள்ளம் கெட்டுவிடுகிறது. இதனால் தான் களவு, கொலை, கம்யூனிசம் எல்லாம் ஏற்படுகிறது"

'களவு, கொலை' வரிசையில் 'கம்யூனிசத்தையும்' வைத்து, அந்தக் கெட்ட எண்ணம் ஏற்பட இடங் கொடாதீர்கள்! — என்கிறார், ஆச்சாரியார். இந்தக் கெட்ட எண்ணம் வளர்ந்தால் "தமிழ்நாட்டுப் பண்பாடு" அழிந்துவிடுமாம்! ஆதலால் எவரும் சினிமாவுக்குப் போகக் கூடாதாம். "கம்யூனிசம்!"—இது ஓர் கெட்ட எண்ணம். அதுவும் களவு, கொலையைப் போன்றது!— இவ்வித விசித்திர வியாக்கியானம், தவிர, அவரிடமிருந்து வேறு எதுவும் எதிர்பார்க்க முடியாதுதான். கோரப்புலி, அகிம்சையை வரவேற்கவா செய்யும்? ஆச்சாரியப் பரம்பரை சமதர்மத்தை ஏற்க ஒப்புமா? — ஆகவே, அவரது, இந்த 'புலிப்போதனை' கேட்டு நாம் ஆச்சரியப்படவில்லை. ஆனால் கம்யூனிசமும் களவு கொலையும் இந்தச் சினிமாவால் ஏற்படுகிறதென்று கூறுகிறாரே, பெரியவர், அவர் மேலும் என்னசொல்லியிருக்கிறார் தெரியுமா சினிமாவுக்கு செலவழிக்கும் காசை 'காங்கிரஸ் பாங்கி'யில் போடச் சொல்லியிருக்கிறார். "ஒரு நாள் சினிமாவுக்குப் போகாமலிருந்தால் ஆயிற்று. 4 அணா மிச்சம். அந்த நாலணாவைக் கொடுத்து, காங்கிரஸ் மெம்பர்களாகச் சேருங்கள்" என்று மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதற்கு சினிமாவைப்பற்றி, வியாக்யானம் செய்திருக்கிறார். மனதில், "எப்போது சேரலாம்? எங்கே? யாரிடம்?" என்று காங்கிரசில் சேர மக்கள் தவிப்பதுபோலவும், ஆனால் அவர்களுக்குள்ள கஷ்டம் நாலணா கிடைக்காததுபோலவும், அதற்கு இவர் வழி சொல்லிக்கொடுப்பதாகவும் எண்ணிக்கொண்டு சினிமாமீது சீறுகிறார்! களவும் கொலையும் கம்யூனிசமும் வளர்ந்துவிடும் என்று பயமுறுத்துகிறார்!! பாபம், பரிதாபப்படுகிறோம் — தள்ளாத வயதில் தளர்ந்துபோகிறதே அவரது அறிவு பலம், என்பதால். மக்கள், காங்கிரசை "அவர்கூறியதுபோல" அசல் சாக்கடை என்றே கருதுகின்றனர். சாக்கடையில் குளிக்க சாதாரி மனிதனும் ஒப்பானே, இன்று. ஆனால்

(8-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆ:- சரி, சரி போடா, அவாளை வரச்சொல்லு.

[மிராசுதாரர்கள் உள்ளே வந்து சேர்கிறார்கள்.]

மி. எல்லோரும்:- நமஸ்காரம்.

ஆ:- எல்லாம் இப்படி அமருங்கோ. நேத்தே வருவேள்னு எதிர்பார்த்திண்டிருந்தேன். வரல்லே.

மி. 3:- உங்க அழைப்பு, நேத்து காலையிலேதான் கிடைச்சுது. இரவு புறப்பட்டு, இப்போ நேரே வந்துவிட்டோம்.

ஆ:- என்ன அப்படி, என் பேரிலே, அவ்வளவு கோபம். என்ன செய்துட்டேன். பத்திரிகையிலே பார்த்தேன். நேக்கொன்னும் புரியல்லே, புடிபடல்லே!

மி. 4:- என்னங்க.

ஆ:- என்னை ஏன் இவா கண்டிக்கணும். கண்டிக்கிற மாதிரி, நான் ஏதும் செய்துடல்லேயேன்னு யோசிச்சிண்டேயிருந்தேன். அதனாலேதான் நேரிலே கூப்பிட்டுக் கேட்டுத் தெரிஞ்சுக்குவோம்னுதான் வரச்சொன்னேன்.

மி. 5:- உங்களையாரும் கண்டிக்கலிங்க. அப்படியெல்லாம் தப்பா நினைச்சுக்கவேணாங்க.

ஆ:- பத்திரிகைகளிலே, பார்த்தேன். தஞ்சை மிராசுதாரர்கள் கண்டனம்னு தலைப்பு போட்டிருந்தது.

மி. 5:- உங்களை நாங்க கண்டிக்க நாங்க என்ன பைத்தியக்காரர்களா, என்ன. நீங்க போட்டிருக்கிற புது வரியைத்தான்......

ஆ:- புதுவரியைக் கண்டிக்கிறேளா—என்ன அப்படி தாங்கமுடியாத பெரிய வரியைப் போட்டுட்டேன்.

மி. 6:- ஆமாங்க, அந்த நிலவரியைக்கட்ட முடியாதுன்னு சொல்லலாம்னுதான்......

ஆ:- இதைச் சொல்விட்டுப் போகத்தான் இவ்வளவு தூரம் வந்தேளா, வரி, கட்டமுடியாதா—என்ன துணிச்சலா, என் எதிரிலேயே சொல்றேள்.

மி. 7:- இல்லிங்க, அதிலே சிரமம் அதிகம் இருப்பதாலேதான்...

ஆ:- இந்தத் தொல்லைக்குத்தான், என்னை ஏன் இழுத்துவம்பு கொடுக்கிறேள். குத்தாலம் குளிர்ச்சியை விட்டுட்டு, இந்த வெப்பத்திலே தள்றேள்னு தலைபாடாய் அடிச்சிண்டேன்.

மி. 8:- நீங்க, வந்தது தெய்வ சங்கல்பம்னு நாங்களெல்லாம், எவ்வளவோ சந்தோஷப்பட்டோம். நீங்க இப்படி பேசரிங்களே.

ஆ:- பின்னே என்ன, காலம் இருக்கிற நிலைமை தெரியாமே, கண்டபடிப் பேசினா, நான் என்ன செய்யட்டும். பேசாமே, அந்தக் கம்யூனிஸ்ட்டுகளைக் கூப்பிட்டு, இந்தாடாப்பா, இலங்காபுரி பட்டத்தைச் சூட்டிக்கோன்னு விட்டுட்டுப் போயிடலாம்னு இருக்கு.

மி. 4:- கம்யூனிஸ்டுகள்கையிலே, ராஜ்யத்தைக் கொடுக்கவா, இவ்வளவு பாடுபட்டது.

ஆ:- அப்போ, இப்படி பேச மாட்டிங்கல்லே. ஒரே வரியிலே சட்டம் போட்டுவிடுவான்களே. ஆளுக்கு ஐந்து ஏக்கருக்குமேல் தேவையில்லை. அதிகம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தை வாங்கி உழுபவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியதுதான் முறையின்னு! அப்போ என்ன செய்வேள்.

மி. 7:- அப்படி செய்துட்டா கூட பரவாயில்லை போலிருக்கு. ஏதோ, சர்க்கார், எங்க நிலத்திற்குரிய கிரயத்தைப் போட்டு......

ஆ:- கிரயமா, இதுவரை நீங்க அதிகமா அனுபவித்த குற்றத்திற்காக அபராதம் போடாம விட்டா போதாதோ! இப்போ, காஷ்மீரிலே செய்யல்லியோ, நஷ்டஈடா கொடுத்தா — விபரம் தெரியாம, விபரீதமாகப் பேசாதிங்கோ!

மி. 4:- ஐயோ!

மி. 3:- அப்படியா, அட பாவிகளா!

மி. 8:- நாசமாகப்போக!

ஆ:- அப்படிப்பட்டவாளண்டை தான், நீங்களும் குடியாய் நடக்குவேள். அவா, கையிலே ராஜ்யமிருந்துதுன்னா, உங்களைக் கூப்பிட்டு இப்படிப் பேசணும்னு என்ன அவசியம்.

மி. 1:- ஆமாங்க.

மி. 2:- கோபப்படாமே, கொஞ்சம் எங்களுக்கு உதவி செய்யணும். உங்க காலத்திலே, நாங்க நஷ்டமடையல்லேன்னு, வேறயார் காலத்திலே, அடையப் போகிறோம்.

ஆ:- நான் கேட்கிற கேள்விகளுக்குக் கொஞ்சம் நிதானமா யோசிச்சு பதில் சொல்லணும்.

மி. 1:- கேளுங்க...

ஆ:- வரிலே உங்களைப்பத்தி, இப்போ, விவசாயிகள் என்ன பேசரா

மி. 2:- பேசராங்களா, ஏசராங்க.

ஆ:- என்ன சொல்லி ஏசரா.

மி. 3:- ஊர் சொத்தை வைச்சுகிட்டு, நாங்க உப்பிக் கொழுக்கிறோமாம். ஊதாரித்தனம்செய்கிறோமாம். உழைப்பவரை உதாசீனப் படுத்தறோமாம்.

மி. 4:-இந்த நிலங்களைப் பிடுங்கி, உழுகிறவங்களுக்கே பிரிச்சு கொடுக்கணுமாம்.

மி. 5:- உம்......சும்மாயிருங்க. இந்தப் பயல்களெல்லாம், அந்தக் கம்யூனிஸ்ட்டுகள் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் கிளிப்பிள்ளை மாதிரி சொல்றாங்க.

ஆ:- கிளிப்பிள்ளையோ, அணிப்

## இவர் கவர்னராம்!

ஆச்சாரியார் சென்னை பிரதமராகப் பணியாற்றுவதற்காக, சம்பளம் எதும் பெறவில்லை — இப்படிக் கூறியவர் சாதாரண ஆளல்ல. 'பேர்லோ பாரத் மாதாகி' யோடும் கொடிதூக்கி, குப்பனல்ல, குமரனல்ல—கவர்னர் இந்த ராஜ்யத்தின் தலைவர் பிரகாசா கூறினார். சேலத்தில், இரண்டு வாரங்களுக்கு முன்னால். ஆனால், சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஆச்சாரியார், தான் கவர்னர் ஜெனரலாக இருந்ததற்குத் தரப்படும் ஆயிரம் ரூபாய் அலவன்சும், மாகாணப் பிரதமராக உள்ளதற்குரிய சம்பளத்தையும் வாங்கிக் கொள்வதாகவும், இதனை மறுத்துக் கூறுபவர் எவராயினும், நம்பவேண்டாம் என்றும் கூறியுள்ளார். நாட்டைக் கட்டியாளும் கவர்னருக்குத் தெரியவில்லை, பிரதமர் சம்பளம் பெறுகிறாரா, இல்லையா என்பது—அப்பாவி மனிதர்—இவர் நமக்கு கவர்னர் என்ற செய்திதான் நம்மை வாட்டுகிறது—வெட்கம் பிடுங்கித் தின்கிறது!

பிள்ளையோ அவா—உங்களுக்கு ஆபத்து உருவாகிறது மட்டும் தெரியுதோல்லியோ.

மி. 6:— அதுதான், இந்த எலக்ஷனிலே பட்டவர்த்தனமாய்ப் புரிஞ்சு போச்சுங்களே.

ஆ:— அதுமட்டுமில்லே. எங்களைப் பத்தி என்ன சொல்றா—தெரியுமோ. சர்க்கார் நடத்திறவா, முதலாளிங்க பக்கம் சேர்ந்துகிட்டிருக்கு—இதை ஒழிச்ச கம்யூனிஸ்ட் சர்க்கார் ஏற்படுத்தினாதான் எங்களுக்கு வாழ்வு, வளமுன்னு பேசிண்டிருக்கிறா—அதற்குத் தூபம் போட்டிண்டிருக்கா, கம்யூனிஸ்ட்காரா.

மி. 8:— ஆமாங்க.

ஆ:— அதுவும், கொஞ்சமும் யோசிக்காம தஞ்சை ஜில்லாவை போலீஸ் ராஜ்யமாய் பண்ணி, வெறப்பளை மூட்டை கட்டி வைச்சிருக்கா.

மி. 2:— ஆமாங்க.

ஆ:— இந்த நிலையிலே, நான்செய்தது தப்புன்னு சொல்லமுடியுமோ—கொஞ்சம் யோசிச்சு பாருங்கோ. கம்யூனிஸ்ட்காரா, மிட்டா, மிராசுகளை ஒழிக்கணும்—ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் வைத்துக்கொண்டு அக்கிரமம் செய்கிறாங்கன்னு பேசறபோது நான் அவங்கவாயைஅடைச்சிடமாட்டேனோ, இப்போ!

மி. 1:— எப்படிங்க?

ஆ:— எப்படியா? அவா, ஆயிர பிரமா நிலம் வைச்சிருந்தா, நாம் என்ன விட்டுவிடுகிறோமா, என்ன—புதுவரி போட்டு, கசக்கிப்பிழிந்து எடுத்துவிடுகிறோமின்னு சொல்ல மாட்டேனா.

மி. 1:— அதுக்காக நாங்க, ஒத்தைக்கு இரட்டையாக வரிகொடுக்க முடியுமா?

ஆ:— சரி, முதலியார்வாள், நீங்க வருஷத்திற்கு எவ்வளவு கிஸ்தி கட்றேள்.

மி. 1:— 1000 ரூங்க.

ஆ:— இப்போ எவ்வளவு?

மி. 1:— அதைப்போல இரண்டு மடங்குங்க.

ஆ:— இதிலே, என்ன கஷ்டம்? கட்டிவிடலாமே சுலபமா.

மி. 2:— எப்படிங்க.

ஆ:— நீங்க வேறொண்ணை மறந்துவிட்டேள். முதல்லே, ரேஷனிருந்த பொழுது சர்க்கார் நெல்லெல்லாம் வாங்கியபொழுது, குறைந்தவிலைக்கு (Procurement rate)குக் கொடுக்க வேண்டிவந்தது. அதாவது, மூட்டை முன்னே ரூ. 18-க்குக் கொடுத்தால், இப்பொழுது ரேஷன், உணவு கண்ட்ரோல் ஒழிந்ததால், அதிக விலைக்கு, குறைந்தது ரூ. 25க்காவது விற்க முடிகிறது. முன்னே ஆயிரம் மூட்டைகள் விற்று ரூ 18000 கிடைத்தால், இப்பொழுது ரூ. 25000 கிடைக்கிறது. அதிக லாபம் ரூ. 7000 வருகிறது. ஏன் புதுவரி கொடுக்கக் கூடாது? உங்களுக்கு கொள்ளை லாபம் வர வழி செய்து கொடுத்து விட்டுதான், வரிகொடுங்கள் என்று கேட்கிறேன். நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன் நீங்க அழற மாதிரி அழுங்க என்கிறேன். இதிலே என்ன கஷ்டம் சொல்லுங்கோ.

மி. 7:— நீங்க சொல்றது வாஸ்தவந்தான். இருந்தாலும், நாங்க இவ்வளவு தூரம், வந்ததற்காக ஏதேனும் ஒருமாற்றம்......

ஆ:— என்ன, பழையபடியும், அதேபல்லவியை பாட ஆரம்பிக்கிறேளே.

மி. 4:— இல்லீங்க.........நாங்க வந்து உங்களைக்கேட்டுக்கிட்டோம். அதற்காக செஞ்சதா, ஏதாவது ஒன்னு செய்யுங்க.

ஆ: உங்க கௌரவத்திற்காக.

மி. 3:— ஆமாங்க.

ஆ:— ஆகட்டும், பார்ப்போம்.

மி. எல்லோரும்:— நமஸ்காரம்.

ஆ:— போய்ட்டு வாங்கோ.

இடம்:— ஆச்சாரியார் இல்லம்.
காலம்:— பகல்.
இருப்போர்:— ஆச்சாரியார், வேலைக்காரன்.

வே:— சாமீ, கடைசியில், அவங்களை தாஜா பண்ணியனுப்பிச்சுட்டீங்களே.

ஆ:— ஆமாண்டா, நமக்கு நல்ல வேலையடா, இது. வர்ர பசங்களை தாஜா பண்றதும், தட்டிக் கொடுக்கிறதும்.

வே:— பின்னே, ஏங்கசாமீ, அவ்வளவு நேரம் பேசினீங்க.

ஆ:— என்னடா பண்றது—கிரகசாரம். நாய் வேஷம் போட்டா குலைச்சுத் தானே ஆகணும்.

வே:— எனக்கென்னமோ, சாமி, அப்படியே ஆயிட்டா கூட நல்லாயிருக்குங்கோ.

ஆ:— என்னடா, நாயாகவே ஆயிட்டா, நல்லாயிருக்குங்கிறியா—

வே:— இல்லீங்க சாமீ, உழுபவங்களுக்கே நிலமுன்னு சொல்றாங்களே, அது மாதிரி, செஞ்சிட்டா, நமக்கென்னங்க நஷ்டம்—நம்ம மிராசு ஒண்ணும் பறி போயிடலீங்களே,

ஆ:— டேய், காங்கிரஸ்காரா வீட்டுச் சோற்றைத் தின்னுட்டுக் கம்யூனிசம் பேசாதே?

வே:— ஏங்கசாமீ, காங்கிரஸ்காரங்க கம்யூனிசம் பேசப்படாதா?

ஆ:— பிரசங்கம், அதிகப் பிரசங்கமாகுது!

வே:— இல்லீங்க சாமி, நீங்க முன்னே ஒரு புத்தகம் எழுதினீங்களே, சிறையிலிருந்த பொழுது—அதிலே கம்யூனிசத்தைப் பத்தி ஆதரிச்சு......

ஆ:— அது, அப்படா—அப்போ, ரயில்வே தொழிலாளர் மாநாட்டில் கூட, கம்யூனிஸ்டுகளைப் பாராட்டிக் கூடப் பேசியிருக்கிறேன்......

வே:— அது அப்போங்களா...! இப்ப இல்லையா......!

ஆ:— ஆமாண்டாப்பா, நீ கேலி பண்ற நிலைமைக்குத்தான் வந்துட்டேன் நான்—உம், ஈஸ்வரா! ✲


விற்பனையாகிறது

சி. என். ஏ. தீட்டிய

சிறிய ஏடு

**அதிர்ச்சிக்கு வைத்தியம்**

விலை அணா 2

விற்பனைக் கழிவு 25%

தபாற்செலவு இனாம். வேண்டுவோர் எழுதுக.

'திராவிட நாடு' நிலையம்
காஞ்சிபுரம்.


Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.